ITP&D | e-gov | PID | PROC
CH | ELCOT 10 JUL 2008 2884 | MD
HR | ACCTS | SECTL | OTHERS

**சுருக்கம்**

முழுமைத்திட்டம் – நிலப்பயன் மாற்றம் சேலம் உள்ளூர் திட்டப்பகுதி – சேலம் மாநகராட்சி – அங்கீகரிக்கப்பட்ட சேலம் முழுமைத்திட்டத்தில் அமையும் ஜாகிர் அம்மாபாளையம் கிராமம் – ச.எண்கள். 1/3, 2/9 மற்றும் 163/1 பரப்பு 164.26 ஏக்கர் நிலத்தினை தொழிற்நுட்ப பூங்கா கட்டிடம் கட்டுவதற்காக விவசாய (Protected mines) பகுதியிலிருந்து பொது தொழிற் பகுதியாக நிலப்பயன் மாற்றம் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (நவ4–1) துறை

அ.ஆ (2டி) எண். 708

நாள்: 9.7.2008

படிக்கப்பட்டது:

1) நகர் ஊரமைப்பு ஆணையர் ந.க.எண்.6943/2008/முதி3 நாள் 29.5.2008.

**ஆணை:**

'எல்காட்' நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் அவர்களின் கோரிக்கையை நகர் ஊரமைப்பு ஆணையரது கருத்துடன் நன்கு ஆய்ந்த பின்னர், தயார் செய்யப்பட்டு வரும் (made up soil) மனையிடத்தில் நிலப்பயன் மாற்றம் கோரப்பட்டுள்ளதால் மண்ணின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்து உத்தேச கட்டிடங்களின் ஸ்திரத்தன்மை குறித்து எல்காட் நிறுவனமே பொறுப்பேற்க வேண்டும் எனவும் மற்றும் 200 அடி அகல முழுமைத்திட்ட உத்தேச 'AA' சாலையினை நிலை நிறுத்தப்படவேண்டும் என்ற நிபந்தனைகளுடன் சேலம் முழுமைத்திட்டத்தில் அமையும் ஜாகிர் அம்மாபாளையம் கிராமம், சஎண்கள். 1/3, 2/9 மற்றும் 163/1 மொத்தப் பரப்பளவு 66.50.5 ஹெக்டேர் (164.26 ஏக்க) நிலத்தினை தொழிற்நுட்ப பூங்கா கட்டிடம் கட்டுவதற்காக விவசாய (Protected mines) பகுதியிலிருந்து பொது தொழிற்பகுதியாக நிலப்பயன் மாற்றம் வழங்க அரசு ஆணையிடுகிறது.

2. 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின்படி இந்நேர்வில் நடவடிக்கை எடுத்திடுமாறும், பத்தி ஒன்றில் சொல்லியுள்ள நிபந்தனைகளை முழுமையாக நிறைவேற்றுவதை உறுதி செய்வதுடன், இந்நில உபயோக மாற்றத்தையும் உள்ளடக்கிய பின்னரே சேலம் உள்ளூர் திட்டப்பகுதிக்கான முழுமைத் திட்டத்தை அரசின் ஒப்புதலுக்கு பணிந்தனுப்ப வேண்டும் என்றும், நகர் ஊரமைப்பு ஆணையர் அரசால் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

அரங்க செல்லமுத்து
அரசு முதன்மை செயலாளர்

பெறுநர்
நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2
உறுப்பினர் செயலர், சேலம் உள்ளூர் திட்டக்குழுமம், 136, நெடுஞ்சாலை நகர், சேலம்.
மேலாண்மை இயக்குநர், எல்காட், 692, அண்ணா சாலை, சென்னை–35
நகல்
அமைச்சர் (செய்தி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
முதன்மை செயலரின் நேர்முக செயலர்,
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, சென்னை–9
இகோ/கூ.ந.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.
9/7/08

BDM Salem